





# "மயங்குனதாலதான் மயங்க வைக்கிறீங்க!"

**டிவி நிகழ்ச்சிகள்ல நடக்குற மாதிரி ஒரு யுத்தத்தை எதிர்பார்த்துத்தானே இந்தப் பக்கத்துக்கு வந்தீங்க.. அட! நாங்களும் அந்த ரெண்டு துருவங்களையும் கூப்பிட்டப்போ, அப்படித்தாங்க நினைச்சோம்! ஆனா, அவங்க என்னடான்னா, 'இசையோட வடிவம்தான் வேற வேற. இசை ஒண்ணுதான். ஒரே அரிசியிலதான இட்லி, இடியாப்பம், தோசை, ஆப்பம்னு எல்லாம் செய்றோம். அப்படித்தான் இசையும்"னு தத்துவம் பேசுறாங்க.**

**இருந்தாலும் கர்நாடக இசை மகாராணி சுதா ரகுநாதனும் நாட்டுப்புற இசை சக்கரவர்த்தி 'புஷ்பவனம்' குப்புசாமியும் சந்திச்சுக்கிட்ட அந்த மாலை வேளை.. சின்னச் சின்ன சண்டைகளும் பெரிய பெரிய சமாதானங்களுமா.. சுவாரஸ்யத்துக்கு எந்தக் குறைவும் இல்லாம நகர்ந்துச்சுங்க. வாங்களேன்.. அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்துக்கலாம்!**

எல்லோர் மனதிலும் இருக்கிற கேள்வியுடன் துவங்கினார் புஷ்பவனம்..

*"கர்நாடக சங்கீதம் மேல் தட்டு மக்களுக்கு மட்டுமே சொந்தமான ஒரு விஷயம்னு ஒரு பிம்பம் இருக்கு. அது உண்மையும்கூட! அது ஏன்ங்க?"*

"நீங்க சொல்றதை முழுசுமா ஏத்துக்க முடியாது. அதே சமயத்துல முழுசா மறுக்கவும் முடியாது. கர்நாடக சங்கீதம் மேல்தட்டு மக்கள்கிட்ட பரவலா இருக்குதான். அதுக்குக் காரணம், அதுல தாளம், ராகம், மாத்திரைனு ஏகப்பட்ட விஷயங்கள் இருக்குது. மேல்தட்டு மக்கள் இதைப் புரிஞ்சுக்கிட்டு, இதைக் கத்துக்கிட்டு, இதை ரசிக்கிறதுக்காகக் காத்திருக்காங்க. ஆனா, பொதுவான மக்கள், இவ்ளோ கஷ்டப்பட்டு இந்த இசையைக் கத்துக்கிட்டு, கவனிக்கிறதை விட, சுலபமா கிடைக்கிற விஷயங்களை ரசிக்கலாமேனு நினைக்கலாம். அதுக்கான நேரம் அவங்களுக்கு இல்லாம போகலாம். கமல்ஹாசன் படம் வித்தியாசமா இருக்கும். ஆனா, 'மாஸ்'க்குப் புரியாது. ரஜினி படம் ஒரே மாதிரிதான் இருக்கும்.. ஆனா, கூட்டம்





கூடும்."

"அப்போ, என்னை சூப்பர் ஸ்டார்ங்கிறீங்க!" என்ற புஷ்பவனத்தின் முகத்தில் அப்படி ஒரு பெருமிதம்! அதைக் கண்டு கொள்ளாதவர் போலத் தொடர்ந்தார் சுதா..

"எளிமையா இருக்குறதுதான் நாட்டுப்புற இசையோட பெருமையே! ஆனா, இன்னைக்கு நாட்டுப்புறப் பாடல்கள்ல ஆபாசம் அதிகமாகிட்டே வர்றதுதான் நல்லா இல்ல.."

- சுதா பேசி முடிக்கும் முன்பே குறுக்கிட்டார் குப்புசாமி..

"இதென்ன இப்படி சொல்லிட்டீங்க! யாரோ ஒரு சிலர் ரெட்டை அர்த்தங்களோட பாடுறதால, மக்கள் இசைப் பாடல்களே ஆபாசமானவைங்கிற முடிவுக்கு வரக் கூடாது. நான் பண்ணிண ஆராய்ச்சியின் அடிப்படையில சொல்றேன்.. ஆபாசமான பாடல்களை மக்களே ஏத்துக்குறது கிடையாது. ஆழமான கருத்துக்களை இலைமறை காயா தெரிவிக்கிற கலை, மக்கள் இசைக்கே உரித்தானது. சொல்லப் போனா, ஆபாசமான விஷயங்களைக்கூட ரொம்ப நாசூக்கா சொல்ற வித்தை, எங்களுக்கே உரிய ஒரு கலை.. அதை விளக்கமா சொல்றேன்.." என்றவர், சில வினாடிகள் தாமதித்து,

"அதுக்கு முன்னால ஒரு விஷயத்தை விளக்க நினைக்கிறேன். நாங்க பாடுறது 'மக்கள் இசைப் பாடல்கள்'. மக்களுக்கான இசையைத்தான் நாங்க இசைக்கிறோம். நாட்டுப்புறப் பாடல்கள்ங்கிற பதமே தப்பு. நாட்டுக்குப் புறத்தே.. அதாவது, கிராமங்களைத் தாண்டின காட்டுப் பகுதியில பாடக்கூடிய பாடல்களுக்குத்தான் நாட்டுப்புறப் பாடல்னு பேர். எங்களோடது நாட்டுக்குள்ள இருக்குற மக்கள் விரும்பிப் பாடுற பாட்டு! நான் ஒரு பாட்டு பாடுறேன்.. கேளுங்க.." என்றவர் மேஜையைத் தட்டி, தாளத்துடன் பாடவே ஆரம்பித்து விட்டார்.

***"நீலக் கருங்குயிலே தங்கமே தங்கம்***

***நான் நிக்கட்டுமா, போகட்டுமா சொல்லடி தங்கம்***

***கானக் கருசலிலே களையெடுக்கும் பொன்மயிலே***

***நீலக்கருங்குயிலே தங்கமே, தங்கம்***

***நான் நிக்கட்டுமா, போகட்டுமா சொல்லடி தங்கம்..***

**மேல் தட்டு மக்களுக்கு மட்டுமே சொந்தமானதாக அறியப்பட்டிருக்கும் கர்நாடக இசை.. ஏழை எளியவர்கள் மெட்டுக் கட்டிப் பாடும் நாட்டுப்புற இசை.. இந்த இரண்டு இசைத்துறை மேதைகளும் சந்திக்கிறார்கள் இங்கே!**

வயக்காட்டுல வேலை பார்த்துக்கிட்டிருக்கிறவகிட்ட இப்பிடி கேக்குறான் அந்தக் காட்டோட மொதலாளி!

அதுக்கு அவ பதில் சொல்றா..

***நிக்கச் சொன்னா நிட்டூரம்..***

***போகச் சொன்னா பொல்லாப்பு***

***நான் இன்னொருத்தன் பொஞ்சாதி***

***என்ன சொல்லி கூப்பிடட்டும்!***

கேட்டவன் மொதலாளி. அவன் மனசைக் காயப்படுத்தாம பதில்





சொல்ற பாட்டுதான் இது. அவன் அவளை தப்பாத்தான் கூப்பிடுறான். ஆனா, இந்தப் பாட்டுல ஏதாவது அசிங்கமா இருந்துச்சா? இதுதான் மக்கள் இசைப் பாட்டு" என்று அவர் சொல்ல, கைகள் தட்டிப் பாராட்டினார் சுதா!

"சரி.. மக்கள் இசைப் பாடல்கள்ல எதாவது 'மெலோடியஸ் சாங்' இருக்குதா?" என்று தன் அடுத்த கேள்வியை முன்வைத்தார் புஷ்பவனத்திடம்!

"வயல்லயும், வெயில்லயும் வேலை செய்றவங்க, களைப்புத் தெரியாம இருக்குறதுக்காகப் பாடுற பாட்டுதான் மக்கள் இசைப் பாட்டு! அதுல எப்படிங்க மெலடி வரும்? வேலை பார்க்கிறவங்களுக்கு உற்சாகமும் உத்வேகமும் கொடுக்குறதுதான் எங்க பாட்டுக்களோட வேலையே!

ஆனா தாலாட்டுப் பாடல்கள் அப்படி இல்ல.. சிறு குழந்தையை தொட்டில்ல போட்டு, 'ஆராரோ.. ஆரிராரோ..'னு அம்மாவோ பாட்டியோ இழுத்தா, இழுவைச் சத்தம் முடியுறதுக்குள்ள குழந்தை தூங்கிடும். அவ்ளோ மெலோடி தாலாட்டுப் பாடல்கள்ல உண்டு.

எங்க பாடல்கள்ல ஒரு சிறப்பம்சம் என்னன்னா, ஆழமான அர்த்தங்கள் இருக்கும். உங்க கர்நாடக இசை மாதிரி இருக்காது!" என்று சொல்ல, பிலுபிலுவென பிடித்துக் கொண்டார் சுதா..

"கர்நாடக இசைப் பாடல்கள் அர்த்தம் நிறைஞ் சவைக்கிறதுக்கு எத்தனை பாடல்களை நான் உங்களுக்கு உதாரணமா சொல்ல? 'அலைபாயுதே கண்ணா'வையே எடுத்துக்குங்களேன்.. கண்ணனை தன் காதலனா நினைச்சுப் பாடுற ஒரு காதலியோட ஏக்கத்தை அதை விட அழகா சொல்லவே முடியாது. 'குறையொன்றுமில்லை மறை மூர்த்தி கண்ணா'வை ஒருமுறை பாடினாலோ, கேட்டாலோ மனசுல என்ன பாரம் இருந்தாலும் சூரியனைக் கண்ட பனி மாதிரி விலகி ஓடியே போய்டுமே.." என்றவர், சட்டென்று அந்தப் பாடலைப் பாடவும் ஆரம்பிக்க, கண்கள் மூடி, தலையசைத்து ரசித்தார் புஷ்பவனம்!



பாடலை முடித்த கையோடு பேசவும் ஆரம்பித்தவர், "பெரும்பாலான கர்நாடக சங்கீதங்களை கேட்கும்போது ஒரு மயிலிறகால வருடின மாதிரி இருக்கும். அதுதான் கர்நாடக சங்கீதம்" என்று ஒரே போடாகப் போட்டார்.

கூடவே, "இதெல்லாம் உங்களுக்கும் தெரியும். ஏன்னா, உங்களால கண்டிப்பா கர்நாடக இசையைப் பாட முடியும். என்னாலயும் மக்கள் இசைப் பாடல்களைப் பாட முடியும். எனக்காக ஒரு கர்நாடக இசைப் பாடலைப் பாடுங்களேன்.." என்று 'சுதா விருப்பத்தை' முன்வைக்க,

"கண்டிப்பா!" என்ற குப்புசாமி,

**"அலைபாயுதே.. கண்ணா..**

**என்மனம்மிகு அலைபாயுதே.."**வை எடுத்து விட.. மேஜையைத் தட்டிப் பாராட்டிய சுதா, தானே முன்வந்து ஒரு மக்கள் இசைப் பாடலைப்



**பன்னிரெண்டாம் கிளாஸ் படிக்கும்போது, ஒருமுறை எலி, தவளையெல்லாம் கட் பண்ணச் சொன்னாங்களா.. அப்போ, மயக்கமாகுற நிலைக்கு வந்திட்டேன்.**



பாடினார்..

*"நாடு செழிக்க வேணும்..*
*நல்ல மழை பெய்ய வேணும்*
*ஊரு உயர வேணும்*
*நம்ம ஒண்ணா இருக்க வேணும்"*

என்று குப்புசாமியின் பாடலையே சிரித்தபடி பாடியது அந்த இசைக் குயில்! ரசித்துக் கேட்ட புஷ்பவனத்தின் கண்களில் மின்னல்!

"சரி.. அடுத்த கேள்விக்கு வர்றேன்! நீங்க இந்த இசைத் துறைக்கு எப்படி வந்தீங்க?" என்றார் புஷ்பவனம்!

"நான் இசைக்கு வருவேன்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை. ஏன்னா, டாக்டரா வரணும்ங்கிறதுதான் என்னோட லட்சியமாயிருந்தது. அதுக்காகவே சயின்ஸ் குரூப் எடுத்தேன். ஆனா, பன்னிரெண்டாம் கிளாஸ் படிக்கும்போது, ஒருமுறை எலி, தவளையெல்லாம் கட் பண்ணச் சொன்னாங்களா.. அப்போ, மயக்கமாகுற நிலைக்கு வந்திட்டேன்.



'மெடிசின் படிக்க ஆசைப்படுற.. அங்க மனுச உடலையே அறுக்கணும்'னு டீச்சர் சொன்னாங்க.. அதுல பயந்தவதான். டாக்டர் தொழில் வேணாம்னு முடிவு பண்ணிட்டேன். அதுக்கப்புறம்தான் 'சரி நம்ம ஆசைதான் நிறைவேறலை. அம்மாவோட ஆசையையாவது நிறைவேற்றுவோம்'னு இசைக்கு வந்துட்டேன்" என்று சுதா முடிப்பதற்குள் குறுக்கிட்ட புஷ்பவனம், "அன்னைக்கு நீங்க மயங்குனதாலதான் இன்னைக்கு இசையால பல பேரை மயங்க வச்சிட்டிருக்கீங்க!" என்று டைமிங்காகப் பேசி கலகலப்பூட்டினார்.

கூடவே, தான் இசைத் துறையில் நுழைந்தது பற்றியும் சொன்னார்..

"நான் பள்ளிக்கூடத்துல படிக்கும்போது பசங்க எல்லாம் 'டேய்.. நீ நல்லாப் பாடுறடா'ன்னு உசுப்பேத்தி, உசுப்பேத்தி, அதுனால எனக்கும் ஆர்வம் தலைக்கேறிடிச்சு. எங்கப்பாகிட்டப் போய், 'அப்பா.. நான் இசை படிக்கப் போறேன்'னு சொல்ல.. அவர் என்னடான்னா, 'நம்ம குடும்பத்துலயே இதுதான் தறுதலை'னு முடிவு பண்ணிட்டார் போல.. 'பாட்டு கத்துக்கிட்டு, பாழாப் போகப் போறியா?'னு வெளக்குமாத்தை எடுத்தாரா.. நான் வீட்டை விட்டு ஓடி வந்து அண்ணாமலை இசைக் கல்லூரியில் சேர்ந்துட்டேன்.." என்று சொல்ல, ஏரியாவே கலகலத்தது சில நிமிடங்களுக்கு.

"இசையை நேசிச்சோம்னா, அது நம்மளை நேசிக்கும். எப்படியும் நம்மகிட்ட வந்து அழிச்சாட்டியமா உக்காந்துக்கும். இசை எந்த வடிவத்துல இருந்தாலும் மனசை இதமாக்குது. மனுஷங்களை மனுஷங்களா வாழ வெச்சுட்டு இருக்குற முக்கியமான கலை இசைதான்!" என்று கர்நாடக இசையின் மகாராணி முடிவுரை சொல்ல, அதை அகமகிழ்வுடன் ஆமோதித்தார் மக்கள் இசையின் சக்கரவர்த்தி!

சரிதான்! இசையால் வசமாகா இதயம் எது?

சந்திப்பு: **பாரதி, ராஜா**
படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**